**செய்தி வெளியீடு எண்: 733** **நாள்:30.10.2019**

**செய்தி வெளியீடு**

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 112ஆவது பிறந்தநாள் மற்றும் 57ஆவது குருபூஜை அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 112ஆவது பிறந்த நாள் மற்றும் 57ஆவது குருபூஜை விழாவினை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் இன்று(30.10.2019) மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையிலான அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்தநாளான அக்டோபர் 30ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தமிழக அரசின் சார்பில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 112ஆவது பிறந்தநாள் மற்றும் 57ஆவது குரு பூஜை விழாவினை முன்னிட்டு, இன்று(30.10.2019) காலை 9 மணியளவில் இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நினைவிடத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். இந்நிகழ்வில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஓ. எஸ். மணியன் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார் அவர்கள், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் திரு. க. பாஸ்கரன் அவர்கள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

மேலும், சென்னை, நந்தனம் சந்திப்பில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச்சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப்படத்திற்கு தமிழக அரசின் சார்பில் இன்று(30.10.2019) காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன் அவர்கள், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் டாக்டர். வி. சரோஜா அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின் அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி. எஸ். வளர்மதி அவர்கள், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகத் தலைவர் திருமதி. பா. வளர்மதி அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஆர். நடராஜ் அவர்கள், திரு. விருகை வி.என். ரவி அவர்கள், வாரியத் தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**